
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1065**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

**95**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# கொழுந்துவிட்டு எரிந்த பகுத்தறிவு உணர்ச்சி!

சென்னை மாகாண சுயமரியாதைத் தொண்டர் இரண்டாவது மாநாடு 30.08.1931 அன்று திருவாரூரில் நடைபெற்றது. விருதுநகர் சுயமரியாதை மாநாடு முடிந்த மூன்றே வாரத்தில், இம்மாநாடு கூட்டப்பட்டது. முதல் நாள் இரவில் இருந்தே முக்கிய பிரமுகர்கள் பலரும் புகைவண்டி மூலம் திருவாரூர் வந்தவண்ணம் இருந்தனர்.

பெரியார், கைவல்யம் சாமி, குத்தூசி குருசாமி, குஞ்சிதம் அம்மையார், எஸ். இராமநாதன் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள் தங்கியிருந்த சாம்ஜி சத்யா என்பவரின் பங்களாவில் இருந்து மாநாடு நடைபெற்ற கருணாநிதி அரங்கத்துக்கு பேரணி நடைபெற்றது.

பேரணி உள்ளே நுழையும்போது, சுமார் ஆயிரம் பேர் மாநாட்டுப் பந்தலில் திரண்டிருந்தனர். எஸ்.என்.பொன்னையா மாநாட்டைத் திறந்துவைத்தார். கே.ஏ.எம். மாணிக்கம் வரவேற்புரையாற்றினார். பெரியார் பேசும்போது, “கையிலே காசு தாராளமாக ஓட்டமுள்ளவர்கள் தலைவர்கள் என்றும், கையிலே காசில்லாமல் கஷ்டமடைபவர்கள் தொண்டர்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்களே ஒழிய யோக்கியதையிலும், லட்சியத்திலும், கஷ்டத்தை பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதிலும் ஒருவருக்கொருவர் கம்மி - ஜாஸ்தியாய் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இனி தொண்டர் என்றும், தலைவர் என்றும் பிரிக்க வேண்டியதில்லை” என்று கூறி, தொண்டர்-தலைவர் என்ற பாகுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

குஞ்சிதம் அம்மையார் பேசும்போது, “மாநாட்டிற்கு பெண்கள் அதிகம் விஜயம் செய்யாதது வருத்தத்தைத் தருகிறது. இனியேனும் தங்கள் சகோதரிகளையும், பெண்டுகளையும் கூட்டி வரும்படி ஆடவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று வேண்டுகோள் விடுத்தார். பிற்பகல் மாநாடு கமலாலய குளத்திற்குப் பின்னால் நடைபெற்றது. காலையில் இருந்ததைவிட கூட்டம் 6 மடங்கு அதிகமாக இருந்தது.

விருதுநகர் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் முழுமையாக ஏற்கப்பட்டன. பகவத் கீதையை நாடகமாக்கி, அதில் வசூலாகும் பணத்தில் ஒரு லட்சம் ரூபாயை கோயிலுக்குத் தரப்போவதாக கண்ணையா என்பவர் அறிவித்திருந்த நிலையில், அதை கல்வி, வைத்தியச் சாலைகளுக்குப் பயன்படும் வகையில் செலவிட வேண்டுமென்று கோரிக்கை வைத்தும், சாரதா சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த பட்டுக்கோட்டை அழகிரி பேசும்போது, நாட்டில் நிலவிய வர்க்க - வர்ண பாகுபாடுகளை ஒழித்துக்கட்டுவதே பகுத்தறிவு இயக்கத்தின் பணி என விளக்கினார். “தோழர்களே நாம் நடத்தும் போராட்டம் காங்கிரஸை எதிர்ப்பதல்ல, பார்ப்பனரைத் துவேஷிப்பதல்ல, கவர்மென்டை தாக்குவதல்ல, பணக்காரர்களை இழித்துக்கூறுவதல்ல, வைதீகத்தின் ஜீவ நாடிக்கும் பகுத்தறிவின் ஜுவாலைக்கும் (கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு) நடக்குமோர் போராட்டமாகும். என்றிருந்தாலும், எவர் எதிர்த்தாலும், எவர் மறுத்தாலும், எவர் இருந்தாலும், எவர் இறந்தாலும் பகுத்தறிவின் ஜுவாலையின் முன்பு வைதீகம் அழிக்கப்பட்டுத்தான் தீருமென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இத்தகைய ஜுவாலையின் முன்பாக காங்கிரசானாலும் சரி, பணக்காரத்தன்மை யானாலும் சரி, எந்த சர்க்காராயினும் சரி நியாயமற்ற முறையில் வந்து குறுக்கிடுமாயின் அவைகளுடைய கதியும் வைதீகத்துடன் சேர்ந்து ஒழிய வேண்டியதுதான்” என்று எச்சரித்தார்.

**...கூட்டம் திரளும்**

## சிந்து சமவெளி நாகரிகத்தின் முடிவு? புதிய தகவல்கள்...

சிந்து சமவெளி நாகரிகம் எப்போது, எப்படி முடிவுக்கு வந்தது என்பது குறித்து தெளிவான முடிவுகள் இதுவரை இல்லாத நிலையில், சமீபத்தில் கம்யூனிகேஷன்ஸ் எர்த் அண்ட் என்விரான்மென்ட் என்கிற இயற்கை தொடர்பான ஆய்விதழில் வெளியான ஆய்வுக் கட்டுரையை முன்வைத்து, பி.பி.சி. தமிழ் விரிவான கட்டுரை வெளியிட்டுள்ளது.

ஐ.ஐ.டி. காந்தி நகரைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மற்றும் சர்வதேச விஞ்ஞானிகள் அடங்கிய குழு மேற்கொண்டுள்ள அந்த ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு ‘ஹரப்பாவின் உருமாற்றத்துக்கு வித்திட்ட நதி வறட்சி’ என்பதாகும். ஆய்வில் கூறியுள்ள அம்சங்களாக, பி.பி.சி. குறிப்பிடுகையில், ‘ஹரப்பா காலகட்டத்தில் (4500–3900 ஆண்டுகளுக்கு முன்பு), சிந்து சமவெளி நாகரிகம் நன்றாகத் திட்டமிடப்பட்ட நகரங்கள், சிறந்த நீர் மேலாண்மை அமைப்புகள், மேம்பட்ட எழுத்து ஆகியவற்றால் அறியப்பட்டது. ஆனால், 3,900 ஆண்டுகளுக்கு முன்பு சரிவைச் சந்திக்கத் தொடங்கிய ‘ஹரப்பா நாகரிகம்’ இறுதியில் இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணமாக, நான்கு முக்கியமான வறட்சி காலகட்டங்கள் இருந்துள்ளன என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


வறட்சி எவ்வாறு சிந்து சமவெளி நாகரிகத்தை மாற்றியது என்பதை, அந்த ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர் குழு, ஆய்வு மாணவரான ஹிரேன் சோலங்கி என்பவர் விரிவாக விளக்கி இருக்கிறார். ‘சராசரியாக ஒரு வறட்சி 85 ஆண்டுகள் நிலைத்தது. ஆனால் சில வறட்சிகள் 100 ஆண்டுகள், 120 ஆண்டுகள்கூட நீடித்தன. பருவமழை பொய்த்த காரணத்தாலும் நதியில் நீரோட்டம் குறைந்ததாலும் வேளாண்மை கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும், இதனால், மக்கள் இடம்பெயர்வு நிகழ்ந்ததாகவும்’ அந்த ஆய்வை முன்வைத்து பி.பி.சி. கட்டுரை வெளியிட்டுள்ளது.

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

**95**

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# இளையோரை ஈர்க்கும் பெரியார்!

இன்றைய இளம்தலைமுறையினரையும் அதிகம் கவர்ந்த தலைவராக தந்தை பெரியார் திகழ்கிறார். மறைந்து 52 ஆண்டுகள் ஆனபோதும், அவர் பேசிச்சென்ற துணிச்சல் மிகுந்த முற்போக்குக் கருத்துகளுக்காக இன்றளவும் நினைவுகூரப்படுகிறார்.

அத்தகைய புகழுக்குரிய தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் இருக்கும், சிக்கய்ய நாயக்கர் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை தொகுக்கப் பட்டு நூலாக்கம் பெற்றது. ‘தமிழின இளைஞர்களுக்கு அழைப்பு!’ என்று தலைப்பிடப் பட்ட அந்நூலை, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிட்டது.

மிக இளம் வயதிலேயே தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா ஆகியோருடன் ஏற்பட்ட தொடர்பு குறித்தும், அப்போது தமிழ்நாட்டில் நிலவிய சமூக-அரசியல்-பொருளாதார நிலைமை குறித்தும், சிறு அறிமுகத்துடன் இந்நூல் தொடங்குகிறது.

சாதி-மத-ஆணாதிக்கம்-மூடப் பழக்கம் போன்ற சமூக நோய்களுக்கு, “பெரியார், கசப்பான மருந்தைத் தந்தார். அந்தக் கசப்பான மருந்தை அப்படியே தந்தால், மக்கள் அதை உட்கொள்ள மறுத்து நோயிலிருந்து விடுபடாமல் ஆகிவிடுவார்கள் என்பதற்காக, அதைத் தேனிலே குழைத்துத் தந்தார் அண்ணா” என்பது போன்ற எளிமையான உவமைகளுடன் பதிவு செய்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அதைப்போலவே மக்களிடையே புழங்கிய பகுத்தறிவுக்கு முரணான புராணக் கதைகளை விரிவாக எடுத்துச் சொல்லி, மக்களை சிந்திக்க சொல்கிறார். குறிப்பாக, தீபாவளியின் கதை, பிள்ளையார் கதை, ஆண்-பெண் குரல் வித்தியாசத்துக்குப் பின்னணியில் இருக்கும் மூடக்கதை, மகளிருக்கு மீசை இல்லாததன் காரணத்தை விளக்கும் மூடக்கதை என மக்களுக்கு எளிதில் சென்று சேரும் கதைகளை எல்லாம் இதில் பதிவு செய்துள்ளார். பெரியார், அண்ணா ஆகியோருடன் பாரதியாரையும், ஜவகர்லால் நேரு அவர்களையும் பகுத்தறிவுச் சிந்தனைக்கு உதாரணமாக, இந்நூலில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

மேற்குலக நாடுகள் எத்தகைய பேரழிவுகளை எதிர்கொண்டாலும் அவற்றிலிருந்து மீண்டு மேன்மை பெறுவதற்குக் காரணம், அவர்களிடம் இருக்கும் பகுத்தறிவு மற்றும் அறிவியல் சிந்தனையே என்றும், அந்த விஞ்ஞானத்தைப் போற்றி வளர்க்க - அதில் வலுப்பெற்று, சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற மூடநம்பிக்கைகளையெல்லாம் தகர்த்தெறிய இளைஞர்களால்தான் முடியும் என்று வலியுறுத்துகிறார்.

ஓர் இளைஞராக, பெரியாரின் பாசறையில் பயிற்சி பெற்றதால், ஏற்பட்ட பகுத்தறிவுச் சிந்தனையை இந்தக் கால இளைஞர்களும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், எல்லா காலத்திலும் பெரியாரின் - பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடிக்க தமிழின இளைஞர்கள் முன்வர வேண்டுமென்ற அறைகூவலுடன் முடிகிறது இந்நூல். இன்றைய இளம் தலைமுறையினர் வாசித்தால்கூட பொருத்தப்பாடுடன் இருக்கும் இந்நூல் அறிவியலின் துணைகொண்டு, பகுத்தறிவுடன் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்



ச.அசோக்குமார்



### பிறந்த நாளில் தலைவரிடம் வாழ்த்து!

2010-ஆம் ஆண்டு டிசம்பர் 7-ஆம் தேதி, எனது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில் அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். இந்தப் புகைப்படம் எனது வாழ்நாள் பொக்கிஷமாக அமைந்தது.

**– ச.அசோக்குமார், அண்ணா நகர், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நறுக்கு

### ரூ.11 லட்சமும் பல லட்சம் இதயமும்...

1967-ஆம் ஆண்டு ஜனவரி 1, விருகம்பாக்கம் கழக நான்காவது மாநில மாநாட்டின் நான்காவது நாள். கழகப் பொருளாளர் என்கிற முறையில், அண்ணாவிடம் தேர்தல் நிதியளித்தார் கலைஞர். முடியுமா? என்று எல்லோரும் கேட்ட தொகை பத்துலட்சம். அவர் கொடுத்தது ரூ.11 லட்சம். அதைத் தொடர்ந்து உரையாற்றிய கலைஞர். “ரூபாய் 11 லட்சத்தையும், அதைச் சேர்க்க காரணமாக இருந்த பல லட்சக்கணக்கான இதயங்களையும் அண்ணா அவர்களிடம் ஒப்படைக்கிறேன்” என்றபோது, வாழ்த்து முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன!

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131